13th August 1960]

Sri P. G. MANICKAM : ஸார், பஸ்களுடைய கட்டண வீதங்களும் மாற்றியமைக்கப்படுமா? அப்படி மாற்றியமைக்கும்போது குறையுமா அல்லது அதிகமாகுமா?

The Hon. Sri V. RAMAIAH : இப்போது இருக்கக் கூடிய அணா பைசாவை நயா பைசாவாக மாற்றியமைப்பதென்பதுதான் இப்போதைய யோசனை. அதைத்தான் நான் ஆரம்பத்தில் சொன்னது போல ஸ்டேட் அட்வைஸரி கமிட்டியின் முன்பு வைத்திருக்கிறோம், அவர்களுடைய ஆலோசனைக்கு.

Raw film factory

* 178 Q.—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the date on which the proposed Raw Film Plant at Ootacamund will be started?

The Hon. Sri R. VENKATARAMAN : This Government have no information as to the date on which the project will be commissioned.

Sri A. A. RASHEED : Sir, may I know whether this Government have got at least information relating to the capacity of the proposed **Raw Film Plant?**

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri J. MATHA GOWDER : எப்போது நிறுவப்படும் என்று சொல்ல முடியவில்லை என்றாலும், நிச்சயமாக உதகையில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்ற உறுதிமொழி கொடுக்க முடியுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : நீலகிரி ஜில்லாவிலே, ஊட்டிக்கு ஐந்து மைலுக்கு அருகாமையில் இடம் ஏற்பாடாகி விட்டது. இன்னும் "காண்டூர் சர்வே" யெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது.

Luggage-carriers in buses

* 179 Q.—Sri P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பிரயாணிகள் தங்களுடைய சாமான்களை வைத்துக்கொள்வதற்காக எல்லா பஸ்களிலும் மேல் தட்டுகள் அமைக்கப்பட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போட உத்தேசமுண்டா?

The Hon. Sri V. RAMAIAH : The answer in the negative.

Sri P. G. MANICKAM : ஸார், தற்போது புதிதாகக் கட்டப்பட்டு வரும் பஸ்களில் பிரயாணிகள் அவர்களுடைய சாமான்களை வைத்துக் கொள்வதற்காக மேல் தட்டுகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பழைய பஸ்களில் மேல் தட்டுகள் அமைக்கப் படாமல் அநேக பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அம்மாதிரி பஸ்களில் மேல் தட்டுகளை அமைக்கும் திட்டத்தை சர்க்கார் கையாளுவார்களா?

[13th August 1960

THE HON. SRI V. RAMAIAH : இப்போது மேல் தட்டுகளை அமைப்பதில் இருக்கக்கூடிய கஷ்டத்தை நன்ருகப் பரிசீலனை செய்து அது சாத்தியமல்ல என்று எனது பதிலில் சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து பரிசீலனை செய்ய வேண்டுமென்ருல் இதையும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டியின் முன்பு வைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

Sugar factory for Kavundapadi

* 180 *Q*.—SRI P. G. MANICKAM : *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலுகா, கவுந்தம் பாடியில் சர்க்கரை ஆலை ஒன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியானல், இந்த ஆலையானது கூட்டுறவு முறையில் ஏற்படுத்தப்படுமா அல்லது தனியார் துறை மூலமாக ஏற்படுத்தப் படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The proposed sugar factory at Kavundapadi, Gobichettipalayam taluk, will be in the private sector.

SRI P. G. MANICKAM : *ஸார், இந்த ஆலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்க அனுமதி கிடைத்தாகி விட்டதா ? அப்படிக் கிடைத்திருந்தால் இந்த ஆலை இன்னும் எவ்வளவு நாளில் முடிவடையும் ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிருர்கள். இன்னும் லைஸென்ஸ் கிடைக்கவில்லை.*

SRI K. R. NALLASIVAM : *தனிப்பட்ட முறையில் பிரைவேட் செக்டாரில் ஆரம்பிப்பதாகச் சொன்னுர்கள். விவசாயிகளிடையே கூட்டுறவு முறையில் ஆரம்பிப்பதற்கு உற்சாகம் இருப்பதாகத் தெரிகிறதே, அவர்களுக்கு உற்சாகம் கொடுத்து ஆரம்பிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன ?*

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு முன்பு 15 லட்சம் ரூபாய் இருந்தால் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முடியும். இப்போது இருக்கும் நிலையில் 25 லட்சம் ரூபாய் சேகரிக்க வேண்டியிருக்கிறது. 25 லட்சம் ரூபாய் சேகரிக்கின்ற அளவுக்கு அங்கு வழியில்லை என்பதால், எப்படியாவது ஒரு பாக்டரி வரட்டும் என்பதற்காக, செய்யக் கூடியவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.